# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.258/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா. 2 |
| Name | : | ஆதிலட்சுமி |
| Father’s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 13.06.2025.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 குமார் எனது கணவர். பட்டியல் சாட்சி 3 வெங்கட்பிரசாத் எனது மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் அவர் எனது ஊரில்தான் வசித்து வருகிறார்கள். எனக்கும், தங்கவேலுவிற்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்தது.

சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நானும், அ.சா.1ம் ஒருநாள் மதியம் 3.00 மணி அளவில் எங்களது கழனிக்கு சென்றோம். அப்போது தங்கவேலுவும் அவரது மகன் குணசேகரனும் வந்து வாய்தகராரில் ஈடுபட்டார்கள். குணசேகர் எனது வலது காலில் கொம்பால் அடித்தார். அதனால் எனது கால் ஜவ்வுவிட்டுபோய்விட்டது. பின்பு இரவு அவர்களது பேரக்குழந்தைகளை வரவழைத்து அடிக்கபோவதாக சொன்னார்கள். இரவு 12, 12.30 மணி அளவில் எங்களது வீட்டிற்கு பன்னீர், பிரசாந்த் மற்றும் சிலர் வந்தார்கள். தங்கவேல்; குணசேகர் வரவில்லை. வீட்டிற்கு வந்த பன்னீர், பிரசாந்த் மற்றும் சிலர் அ.சா.1 எனது கணவரையும், என்னையும் தடுக்க வந்த எனது மகனையும் அடித்தார்கள். எனது கணவருக்கு முகத்திலும், முதுகிலும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். எனது மகனுக்கு முகத்தில் தாக்கி மேல் உதடு கிழிந்துவிட்டது. நாங்கள் மூவரும் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். பின்பு போலிசார் மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.258/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா. 3 |
| Name | : | வெங்கட்பிரசாத் |
| Father’s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 13.06.2025.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். திண்டிவனத்தில் உள்ள சிப்காட்டில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தகப்பனார். அ.சா.2 எனது தாயார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்களது உறவினர்கள். கடந்த 08.09.2015ம் தேதி மாலை 6.00 மணி அளவில் நான் கல்லூரி முடித்து வீட்டிற்கு வந்தேன். அ.சா.1, அ.சா.2

என்னிடம் எதிரிகளிடம் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக மத்திய வேலையில் கழனிக்கு செல்லும்போது 1, 2 எதிரிகள் தாக்கியதாக சொன்னார்கள். அன்று இரவு 12.00 மணிக்குமேல் பன்னீர் மற்றும் பிரசாந்த் (3, 4 எதிரிகள்) மற்றும் சிலர் வந்து என்னையும, அ.சா.1, அ.சா.2யும் தாக்கினார்கள். அ.சா.1க்கு உதட்டில் காயம் ஏற்பட்டது. எனக்கும் உதட்டில் காயம் ஏற்பட்டது. எனது அம்மாவிற்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. நாங்கள் மூவரும் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். அங்கு போலிசார் வந்து விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.